# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# VELANAI CENTRAL COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION - CANADA
(A Registered Non-Profit Organization)

4 Maple Beach Cres., Brampton, ON, L7A 2T9, Canada | **Tel:** 416-949-7795 / 416-661-3494 | **Fax:** 905-970-0450



**President**
S. Elancheliyan

**Vice President**
K. Kalyanasundaran

**Secretary**
S. Sivakumar

**Assistant Secretary**
S. Meakavarnan

**Treasurer**
S. Sritharan

**Auditor**
R. Balachandran

**Committee Members**
P. Balasundaram
Pirabu Ponnampalam
K. S. Kathirgamanathan
S. Mahapooranan
Lokan Sundaram
Pon Panchalingam
K. Baskaran
R. Ruthirakanthan
R. Thiruvarooran
T. Eilamurugan

**Patrons**
S. Sivaloganathan
A. Ariyaratnam
A. Senthilvadivel
A. Balendran
K. Gnanachchemmal


பேரன்புடையீர்,

எமது முன்னாள் ஆசிரியர்கள் அமரர்கள் E. K. நாகராஜா மற்றும் S. வரதலிங்கம் ஆகியோரது ஞாபகார்த்த விளையாட்டுத்திடலில் நடாத்தப்படும் ஒன்றுகூடல்-2013 நிகழ்வுக்கு வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் Dr. பொன் விமலேந்திரன் அவர்களையும் ஏனைய பழைய மாணவர்கள் அவர்களது குடும்பத்தினர் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களையும் சங்கத்தின் சார்பில் இன்முகங் கொண்டு வரவேற்பதோடு முதற்கண் எனது அன்பு கலந்த இனிய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஒன்றுகூடல் சங்கத்தின் 18வது ஒன்றுகூடல் என்பதுடன் எனது தலைமையில் நடைபெறும் ஐந்தாவது ஒன்றுகூடல் என்றவகையில் பெருமையும் பெருமகிழ்வும் அடைகின்றேன். எமது பழைய மாணவர்களின் அனுபவப்பரிமாற்றங்கள் மூலமாக அவர்களிடையே நட்புப்பாலத்தை ஏற்படுத்தி அதன்மூலம் எமது கல்லூரிக்கு உதவும் திட்டங்களுக்கு உரமேற்றும் ஒரு களமாகவே இத்தொடர் ஒன்றுகூடல்கள் நடாத்தப்படுகின்றது என்பதனை நீங்கள் நன்கு அறிவீர்கள் என்பதில் எனக்கு எந்தவித ஐயப்பாடும் இல்லை.

ஏதாவதொரு செயற்பாட்டின் ஊடாகவே நாம் எம்மிடையே பரஸ்பர நட்பையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும் என்ற அசையாத நம்பிக்கையில் எமது சங்கத்தின் முதலாவது ஒன்றுகூடல் நிகழ்வு 1996ம் ஆண்டு யூலை மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக இன்று 18வது நிகழ்வை நடாத்துவது எமது சங்கத்திற்கும் கல்லூரிக்கும் கிடைக்கப்பெற்ற மிகப்பெரும் பெருமை என்றால் அது மிகையல்ல.

இச்சாதனைக்காக தங்களது விலைமதிப்பற்ற நேரத்தைச் செலவிட்டு அயராது தன்னலமற்ற சேவை புரிந்த அனைத்துத் தொண்டர்களையும் வேண்டும் போதெல்லாம் மனங்கோணாது தாங்கள் கஸ்டப்பட்டுச் சேகரித்த பணத்தை வாரிவழங்கிய நன்கொடையாளர்களையும் சங்கம் மற்றும் கல்லூரிச் சமூகம் சார்பில் மிகுந்த நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன்.

மேலும் இப்பெரும்பணி தொடரத் தங்கள் நல்லாதரவு தொடர வேண்டுமெனவும் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

***"நன்றே செய்வோம் அதையும் இன்றே செய்வோம்"***

நன்றியுடன்

சி. இளஞ்செழியன்
தலைவர்
04-08-2013


**Email:** vccosacanada@gmail.com | **Website:** www.vccosacanada.com

# வேலணை மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா

## செயற்பாட்டு அறிக்கை

1) **பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்: ($ 23, 988.00)**
வேலணை மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பொருளாதார வசதியின்மையால் தமது பட்டப்படிப்பைத் தொடரமுடியாமல் அல்லலுறும் 37 மாணவர்களுக்கு (யாழ் பல்கலைகழகம் - 28 மாணவர்கள், கிழக்குப் பல்கலைகழகம் - 09 மாணவர்கள்) மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு தலா **3000.00** ரூபா (இலங்கை ரூபா) வீதம் மாதாமாதம் **111, 000.00** ரூபா நிதியுதவியை தற்பொழுது வழங்கி வருவதோடு இத்திட்டம் தொடங்கிய **யூன்**- 2011 இலிருந்து இதுவரை மொத்தம் $ **23, 988.00** டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளது.

2) **கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்: ($ 1, 426.00)**
இத்திட்டத்தின் மூலம் மிகவும் பின்தங்கிய நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 9 க.பொ.த உயர்தர வகுப்பு **விஞ்ஞானப்பிரிவு** மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று ரியூசன் கற்றலுக்கான வசதியைப் பெற்றுள்ளார்கள். மாணவர் ஒருவருக்கு மாதம் 2000.00 ரூபா வீதம் மாதாமாதம் 18,000.00 ரூபா நிதியுதவியை தற்போது வழங்கி வருகின்றோம். **ஒக்ரோபர்** - 2012 முதல் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்திற்காக **$ 1, 426.00** டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளது.

3) **6, 8, 9, 10, 11ம் வகுப்பு மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் செயற்திட்டம்: ($ 979.00)**
பொதுவாக தீவுப்பகுதியில் குடித்தொகை ஐதாக்கத்தின் காரணமாக மாணவர் எண்ணிக்கை குறைவாகும். எனவே எமது கல்லூரியில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடன் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றது. இவ்வாறு அனுமதி பெறும் மாணவர்களில் 45 வீதமான மாணவர்கள் அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கியவர்களாக இருப்பது அதிர்ச்சி தரும் உண்மையாகும். இச்சதவீதமான மாணவர்களது எழுத்தறிவு மற்றும் கணித அறிவினை மேம்படுத்துவது வழமையான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் அசாத்தியமானதாகும். இவ்வாறான மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றார்கள். இவர்களுக்கான விசேட பரிகார கற்றல் செயற்றிட்டம் **ஏப்ரல் 27,** 2013 முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கு மாதம் ஒன்றிற்கு **49, 800.00** இலங்கை ரூபாக்கள் வீதம் மாதாமாதம் வழங்கிவருகின்றோம். இதுவரை இத்திட்டத்திற்காக **$ 979.00** டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளது.

4) பழைய மாணவர் மற்றும் அவர்களது குடும்பத்தினரது மரணச்சடங்குகளின்போது சங்கம் சார்பான அனுதாபச்செய்தியை கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் தெரிவிப்பதோடு E-mail மூலம் துரிதகதியில் சங்க உறுப்பினர்களுக்குத் தகவல் பரிமாற்றம் செய்து வருகின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சங்கத்தால் அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் பிற சங்கங்களால் பின்பற்றப்படும் வகையில் முன்மாதிரியான செயற்திட்டங்கள் எம்மால் செயற்படுத்தப்படுகின்றன. கடந்த இரண்டரை ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளைச் செய்தமை இங்குள்ள நேர வசதியின்மையைக் கருத்திற் கொள்ளுமிடத்து ஓர் சாதனை என்று கூறினால் மிகையாகாது. மேலும் எமது சங்கத்தின் துரித வளர்ச்சிக்குக் காரணமான எமது தலைவரின் ஊக்கத்தையும் கடின உழைப்பையும் நிர்வாகசபை உறுப்பினர்களது ஒத்துழைப்பையும் தன்னலமற்ற உயரிய சேவையையும் பாராட்டுவதோடு அவர்களுக்கு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் எமது நிர்வாகசபை சிறப்பாக இயங்கக் காரணமான பழைய மாணவர்கள், வர்த்தகப்பெருமக்கள் பத்திரிகை அன்பர்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களையும் இவ்வரிய சந்தர்ப்பத்தில் மனதார பாராட்டுவதோடு சங்கத்தின் சார்பில் நன்றியையும் கூறிக்கொள்கின்றேன்.

ச. சிறீதரன் (செயலாளர்)

# வேலணை மத்திய கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்-கனடாவினால்

க.பொ.த உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் 9 மாணவர்களுக்கு
2012 ஒக்ரோபர் மாதத்திலிருந்து மாதாந்தம் கல்வி ஊக்குவிப்புப்பணமாக
மாணவர் ஒருவருக்கு ரூபா 2 000(ரூபா இரண்டாயிரம்) வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.
2013 பெப்ரவரி மாதத்திற்குரிய கல்வி ஊக்குவிப்புப்பணம் வழங்கும் நிகழ்வின் நிழல் படங்கள்

எமது ஓய்வுநிலை சிரேஸ்ட ஆசிரியர் திரு லீனஸ் அவர்கள் கனடா பழையமாணவர் சங்கத்தினரின் இச்செயற்றிட்டத்தை வரவேற்றதுடன் மாணவர்களுக்கு ஆசியும் வழங்கினார்.





பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ஸ்ரனிஸ்லஸ் அவர்கள் கனடா பழையமாணவர் சங்கத்தினரின் இச்செயற்றிட்டத்தை வாழ்த்தி உரையாற்றுகின்றார்.













வேலணை பழைய
மாணவர் சங்கத்தின்
உபதலைவர்
திரு.க.பாலகிருஸ்ணன்
அவர்கள் கனடா
பழைய மாணவர்
சங்கத்தினரின்
இச்செயற்றிட்டத்தை
உளம் மகிழ்ந்து
பாராட்டுகின்றார்.







# பரிகார கற்பித்தல் செயற்திட்டம் (Remedial Tutoring Project):

எமது கல்லூரியில் தரம்6 இற்கு விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறு விண்ணப்பித்து அனுமதி பெறும் மாணவர்கள் தரம்1 தொடக்கம் தரம்5 வரையான ஆரம்பப்பாடசாலைகளில் இருந்தும் தரம்1 தொடக்கம் தரம்11 வரையான இடைநிலைப்பாடசாலைகளில் இருந்தும் வருபவராவர்.

அவ்வாறு இடைநிலைப்பாடசாலைகளில் இருந்து வரும் மாணவர்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளை எடுத்த மாணவர்களுக்கு அப்பாடசாலைகள் எமது கல்லூரிக்கு அனுமதி பெறுவதற்கு விடுகைப்பத்திரம் வழங்குவதில்லை. பெரும்பாலும் புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெறும் மாணவர்கள் தான் எமது கல்லூரிக்கு இடைநிலைப்பாடசாலைகளில் இருந்து வந்து அனுமதி பெறுகின்றார்கள்.

**பொதுவாக தீவுப்பகுதியில் குடித்தொகை ஐதாக்கத்தின் காரணமாக மாணவர் எண்ணிக்கை குறைவாகும். எனவே எமது கல்லூரியில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடன் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.**

**இவ்வாறு அனுமதி பெறும் மாணவர்களில் 45 வீதமான மாணவர்கள் அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கின்றார்கள்.**

இச்சதவீதமான மாணவர்களது எழுத்தறிவு மற்றும் கணித அறிவினை மேம்படுத்துவது வழமையான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் அசாத்தியமானதாகும்.

இவ்வாறான மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றார்கள். இவர்களுக்கான விசேட பரிகார கற்றல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எங்கள் அமைப்பு ஊக்குவிப்பையும் நிதியுதவியையும் வழங்க வேண்டும் என்று அதிபர் திரு. சி. கிருபாகரன் அவர்கள் விடுத்த வேண்டுகோள் ஏப்ரல் மாதம் 7ம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இதன்விளைவாக இத்திட்டத்தை முதற்கட்டமாக **தரம்6, தரம்8, தரம்9, தரம்10, தரம்11 மாணவர்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குச் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.**

2013ம் ஆண்டிற்கான முதலாம் தவணைப்பரீட்சைப் புள்ளிகளை பகுப்பாய்வு செய்ததன் மூலம் பரிகாரக்கற்பித்தல் செயற்றிட்டத்தில் உள்வாங்கப்படும் மாணவர் விபரமும் மாதாந்த செலவு மதிப்பீடும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஏப்ரல் 27, 2013** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்திற்கு மாதம் ஒன்றிற்கு **49, 800.00** இலங்கை ரூபாக்கள் வீதம் மாதாமாதம் வழங்கிவருகின்றோம்.

**இச்செயற்திட்டமானது எமது சங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நான்காவது நீண்டகாலச் செயற்திட்டம் என்பதுடன் தற்போது நடைமுறையிலுள்ள மூன்றாவது செயற்திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.**

செயற்திட்டம் 01: போசாக்கு உணவுத்திட்டம் (**நிறைவு பெற்ற திட்டம், Sep 02, 1998 - March 2000**)
செயற்திட்டம் 02: பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம் (June 2011 முதல்)
செயற்திட்டம் 03: உயர்தர வகுப்பு விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான நிதியுதவித் திட்டம் (Oct 2012 முதல்)
செயற்திட்டம் 04: தரம் 6, 8, 9,10, 11 மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் செயற்திட்டம் (April 27, 2013 முதல்)

**சி. இளஞ்செழியன்**
**செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர்**
**(Project Coordinator)**

## பரிகார கற்பித்தல் செயற்திட்டம: மாதாந்த செலவு மதிப்பீடு

## (Remedial Tutoring Project: Monthly Expense Estimation)

| வகுப்பு | பாடம் | பிரிவு | மாணவர் எண்ணிக்கை | ஒரு மாதத்தில் கற்றல் செயற்றிட்ட மணித்தியாலம் | செலவு மதிப்பீடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆசிரியர் கொடுப்பனவு | மேற்பார்வை ஒழுங்குகள் மற்றும் எழுது பொருட்கள் | |
| 6 | தமிழ் | பிரிவு 1 | 16 | 16 | 16X 250 =4 000 | 16X 100 = 1 600 | 13, 600.00 |
| | கணிதம் | பிரிவு 1 | 38 | 16 | 16X 250 =4 000 | | |
| | விஞ்ஞானம் | பிரிவு 1 | 19 | 16 | 16X 250 =4 000 | | |
| 8 | தமிழ் | பிரிவு 1 | 14 | 16 | 16X 250 =4 000 | 16X 100 = 1 600 | 17, 600.00 |
| | கணிதம் | பிரிவு 1 | 24 | 16 | 16X 250 =4 000 | | |
| | | பிரிவு 2 | 24 | 16 | 16X 250 =4 000 | | |
| | விஞ்ஞானம் | பிரிவு 1 | 31 | 16 | 16X 250 =4 000 | | |
| 9 | விஞ்ஞானம் | பிரிவு 1 | 78 | 8 | 8X 225 =1 800 | | 1, 800.00 |
| 10 | கணிதம் | பிரிவு 1 | 31 | 16 | 16X 250 =4 000 | 16X 100 = 1 600 | 13, 600.00 |
| | | பிரிவு 2 | 31 | 16 | 16X 250 =4 000 | | |
| | விஞ்ஞானம் | பிரிவு 1 | 41 | 16 | 16X 250 =4 000 | | |
| 11 | விஞ்ஞானம் | | 69 | 8 | 16X 400 =3 200 | | 3, 200.00 |
| | மாதாந்த செலவு மதிப்பீடு (**49, 800.00** ரூபா) | | | | 45, 000.00 | 4, 800.00 | **49, 800.00** |

சு. சிவகுமார் (பொருளாளர்)


# Computer Lab Enhancement Project


**வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடாவின் கல்லூரியின் கணனி வளநிலையத்தை மேம்படுத்தும் செயற்திட்டம்:**


எமது கல்லூரியில் உள்ள கணனிகள் நீண்டகாலப்பாவனையினாலும் பராமரிப்பில் உள்ள வினைத்திறனின்மையாலும் பழுதடைந்து இயங்கா நிலையில் காணப்படுகின்றன. எனவே பாவனைக்கு உடனடித்தேவையாக குறைந்தது 10 கணனிகளை வழங்குவதோடு வளநிலையத்திற்கு குளிரூட்டி (AC) மற்றும் இணையத்தள வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டத்தை கல்லூரியின் பழையமாணவரும் **Cash Point நிறுவனத்தின் இயக்குனருமான திரு. குமார் சுப்பிரமணியம்** அவர்களது பொருளாதார அனுசரணையுடன் ஆரம்பித்துள்ளோம் என்பதனை சங்கத்தின் சார்பில் அறியத்தருகின்றோம்.

திரு. குமார் அவர்கள் ரூபா 12 இலட்சத்தி 50 ஆயிரம் (10 ஆயிரம் டொலர்கள்) வரை இத்திட்டத்திற்காகச் செலவிட முன்வந்துள்ளார். கருணையுள்ளம் படைத்த இவரது இந்த உதவி புலம்பெயர் மண்ணின் வர்த்தகப் பெருமக்களுக்கு ஓர் முன்மாதிரியான செயற்பாடு என்பதும் அனைவராலும் பாராட்டப்படவேண்டிய விடயமும் என்றால் அது மிகையல்ல.

எங்கள் சங்கத்தைப் பொறுத்தவரையில் எமது கல்லூரி அன்னையின் கரங்களை வலுப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான உடனடித்தேவைகளைப் பூர்த்திசெய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்பதையும் அதற்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். எமது இப்பெரும்பணி தொடரப் பழையமாணவர்கள் அனைவரினதும் நல்லாதரவை நாடுகின்றோம்.







**Project Coordinator**
**Mr. S. Elancheliyan**

**Project Sponsor**
**Mr. Kumar Subramaniam**

## போசாக்குள்ள மதிய உணவு செயற்றிட்டம் (Nutritious Lunch Project)

இச்செயற்றிட்டம் **Sep 02, 1998** இல் ஆரம்பிக்கப்பட்டு **March 2000** இல் நிறைவுபெற்றது.

இத்திட்டத்திற்கு நான்கு கட்டங்களாக நிதியுதவி வழங்கப்பட்டது. ஆரம்பக்கட்டமாக Sep 02, 1998 இல் $ **1175.00** டொலர்களும், Jan 12, 1999 இல் $ **1200.00** டொலர்களும் May 22, 1999 இல் $ **1125.00** டொலர்களும் Oct 26, 1999 இல் $ **1500.00** டொலர்களுமாக மொத்தம் $ **5000.00** டொலர்கள் அனுப்பப்பட்டதுடன் அதிபர் திரு. கு. கணேசலிங்கம் அவர்களிடமிருந்து முழுச்செலவுக்குமான கணக்கறிக்கையும் பெறப்பட்டது.

**இலங்கைக் கல்லூரிகளின் வரலாற்றிலும் உலகளாவிய பழைய மாணவர் சங்கங்களின் வரலாற்றிலும் முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்ட மதிய உணவு வழங்கும் திட்டம் இதுவேயாகும். எமது சங்கத்தால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட முதலாவது நீண்ட காலச்செயற்றிட்டமும் இதுவேயென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.**


காலத்தின் கட்டாயமான இப்பெரும்பணியை அதிபர் திரு. கு. கணேசலிங்கம் அவர்களும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு. சி. இளஞ்செழியன் அவர்களும் இணைந்து நன்கு திட்டமிட்டுப் பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் கல்லூரிச் சமூகம் ஆகியோரது ஒத்துழைப்புடன் பலவிதமான இன்னல்களுக்கு மத்தியிலும் சிறப்பாக நடைமுறைப்படுத்தியமை சங்கத்தின் வரலாற்றில் மிகப்பெரும் சாதனையாகும்.

இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் உற்சாகத்துடன் கல்வியிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டதுடன் கல்லூரியின் மாணவர் எண்ணிக்கையும் அதிகரித்தது யாவரும் அறிந்ததே.
**கீழுள்ள புகைப்படம் 1999ம் ஆண்டு நடுப்பகுதியில் எடுக்கப்பட்டது.**



**மாணவர்களுக்குப் போசாக்குணவு வழங்கப்படுவதனை வேலணை பழைய மாணவர் சங்க உப தலைவர் மறைந்த திரு. வா. தவச்செல்வம் பொருளாளர் திரு. சி. த. மகாலிங்கம் மற்றும் வகுப்பாசிரியை செல்வி. கலாரஜனி கனகலிங்கம் ஆகியோர் பார்வையிடுகின்றனர். கல்லூரி ஊழியர் திரு. க. குகனேஸ்வரன் உணவு வழங்குகின்றார்.**

# கல்லூரியின் புதிய நுழைவாயில் நிர்மாணத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா




எமது கல்லூரியின் புறத்தோற்றம் அழகுறவும்,
காண்போர் மனதில் அதன்பால் ஓர் மதிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும்,
கம்பீரமும் கலைத்துவமும் மிக்கதோர் புதிய நுழைவாயில்
நிர்மாணிக்கும் திட்டம் இவ்வாண்டு எமது சங்கத்தினால்
முன்னெடுக்கப்படுகின்றது.
அதன் அடிக்கல் நாட்டுவிழா 26.06.2013 அன்று
கல்லூரி அதிபர்
திரு. சி. கிருபாகரன் அவர்களாலும்
கட்டடக் கலைஞர்
திரு. சி. விக்கினேஸ்வரநாதன் அவர்களாலும்
ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

---

**Velanai Central College OSA-France**